# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/7 - 2016 නොවැම්බර් මස 07 වැනි සඳුදා - 2016.11.07

*1992/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

*1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கல்விச் சேவைக்குழுவுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல. 1989/29 மற்றும் 2016.10.19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள “ஆ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்பு பற்றிய ஏற்பாடுகளுக்கு பின்வரும் ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டு அந்த அட்டவணை 2016, ஒற்றோபர் 20 ஆந் திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல. 1989/29 மற்றும் 2016.10.19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*எச். எம். காமினி செனெவிரத்ன,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,*
*இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட,*
*கொழும்பு 05,*
*2016, நவெம்பர் 07.*

**அட்டவணை "ஆ"**

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|
| 8. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய,<br><br>I. அகில இலங்கை சேவையைச் சாராத பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்.<br><br>II. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (இணைப்பு II ) இல் பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதி உயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்.<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்.<br><br>III. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடும் பதவி நீக்கமும். |
| 9. கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் வரக்கூடிய சகல உத்தியோகத்தர்களும் (கல்வி அமைச்சின் கீழ் வராத அகில இலங்கைச் சேவையைச் சேர்ந்த மற்றும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தவிர்ந்த). | வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பில் நிவாரணம் வழங்குதல். |

11- 1014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.